# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.வி.மு.ச.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8075867

C

1. District மாவட்டம் : Thiruvallur PS காவல்நிலையம் : V&AC, Tiruvallur Year ஆண்டு : 2022 FIR No. மு.த.அ. எண் : 3/AC/2022/TLR Date நாள் : 04.04.2022 @ 17.30 hrs

2. (i) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: ACT 1988 (as amendment in 2018) Sections பிரிவுகள்: U/s 7
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 31.03.2022 Date to : நாள் வரை at 13.30 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.04.2022 Time நேரம் : 16.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.04.2022 Time நேரம் : 16.30 hrs & 17.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - Written (statement recorded)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 60 kms North
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Assistant Engineer, TANGEDCO, Gummidipoondi, Thiruvallur District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Indirajeet Kushwaha (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. Sriram Varama
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Computer Sales & service Shop. (g) Address : முகவரி No. 200, Madavaram Highroad, Madavaram, Chennai-60.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டுக்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Jogan, Commercial Inspector, O/o the Assistant Engineer, TANGEDCO, Gummidipoondi, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded bribe amount of Rs. 10,000/.

10. Total value of properties stolen / involved
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு — NIL —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — NIL —

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவைப்படின் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed herewith.

13. Action ta[illegible] commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took [illegible]spector Rank Annadurai take up the Investigation / Refused Investigation / transferred to PS VSPAC, Kanchipuram, Pol Thiruvallur. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு
[signature] 04/04/2022

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 4/4/2022

15. Date & Time of despatch to the Court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம்
05.04.2022 at 09.55 hrs.

Name G. Annadurai
Rank Inspector of Police, VSPAC, Kanchipuram, Pol Thiruvallur.

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.03/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continuous.....)**

நான் மேற்குறிப்பிட்ட முகவரியில் என் தாய், தந்தை மற்றும் ஒரு தம்பியுடன் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். நான் M.Sc., (Cyber Forensic and System Security) படித்துள்ளேன். எங்களது பூர்வீகம் உத்திரபிரதேச மாநிலம் ஆகும். சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் குடும்பத்துடன் சென்னைக்கு வந்து குடியேறிவிட்டோம். நான் தற்போது சென்னை மூலக்கடை சந்திப்பில் கடந்த இரண்டு வருடமாக வாடகை கடையில் "Smart System Service" என்ற பெயரில் கணினி பழுது பார்த்தல் மற்றும் கணினி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு இன்னும் திருமணமாகவில்லை. என் தந்தை திரு.ஸ்ரீராம் வர்மா பெயரில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, பாப்பான்குப்பம் என்ற கிராமத்திற்குட்பட்ட சர்வே எண்.317/26B2 மற்றும் 317/27C2-ல் மொத்தம் 4356 சதுரடிகள் கொண்ட காலி வீட்டுமனையை கும்மிடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 23.08.2021 ஆம் தேதி ஆவண எண்.4075/2021 ஆக பத்திரப் பதிவு செய்யப்பட்டு, எனது தந்தை திரு.ஸ்ரீராம் வர்மா பெயரில் பட்டா எண்.3649 பெற்று எங்கள் அனுபவத்தில் உள்ள வீட்டுமனையில் புதியதாக வீடு கட்டவுள்ளதால் அவ்விடத்திற்கு மின் இணைப்பு பெறவேண்டி கடந்த 30.03.2022-ந்தேதி கும்மிடிப்பூண்டியிலுள்ள ஒரு நெட் சென்டரில் தற்காலிக மின் இணைப்பு கேட்டு எனது தந்தை திரு.ஸ்ரீராம் வர்மா என்ற பெயரில் ஆன்லைனில் பதிவு செய்து, அதனுடன் அதுசம்மந்தப்பட்ட ஆவணங்களையும் இணைத்து ஆன்லைனில் (Application Reference No.200010930322344) மனு செய்திருந்தேன். பின்னர் மறுநாள் 31.03.2022-ந்தேதி மதியம் சுமார் 13.30 மணிக்கு கும்மிடிப்பூண்டி மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று, அங்கு இருந்த வணிக ஆய்வாளர் திரு.ஜெகன் என்பவரை பார்த்து எங்கள் மனு குறித்து கேட்டபோது, அவர் அலுவலக கணினியில் எங்கள் மனுவினை பார்த்துவிட்டு சரியாக உள்ளது என்றும் தற்காலிக மின் இணைப்பு வழங்குவதற்கு மொத்தமாக பணம் ரூ.15,000/- செலவாகும் என்றும், மின் இணைப்பு வழங்கவேண்டிய இடத்தை பார்வையிட வேண்டும் என்றும் கூறி சிறிது நேரம் கழித்து வணிக ஆய்வாளர் திரு.ஜெகன் அவர்கள், அவரின் உதவியாளர் ஒருவரை என்னுடன் அனுப்பி மின் இணைப்பு வழங்கவேண்டிய எங்கள் இடத்தை ஆய்வுசெய்து வருமாறு தெரிவித்து அனுப்பினார். அதன்படி நாங்கள் இருவரும் சென்று எங்கள் வீட்டு மனையினை பார்த்துவிட்டு, என்னுடன் வந்தவர், திரு.ஜெகன் அவர்களை சென்று சந்திக்குமாறு என்னிடம் தெரிவித்துவிட்டு, அங்கிருந்து சென்று விட்டார். பின்னர், நான் மீண்டும் கும்மிடிப்பூண்டி

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.03/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continuous.....)**

மின்சார வாரியம் அலுவலகத்திற்கு வந்து திரு.ஜெகன் அவர்களை சந்தித்து. அவரிடம் எனது குடும்ப சூழ்நிலையை தெரிவித்து பணம் ரூ.15,000/-யை குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு வணிக ஆய்வாளர் திரு.ஜெகன் அவர்கள் அவர் கேட்ட பணம் ரூ.15,000/-ல் இருந்து ரூ.2,000/- குறைத்துக்கொண்டு. இறுதியாக ரூ.13,000/- கொடுக்குமாறும் அதில் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் பணம் ரூ.3,000/-த்தை தன்னிடம் தருமாறும் அதனை தானே செலுத்திவிடுவதாகவும். அதுபோக மீதி பணம் ரூ.10,000/-த்தை தனக்கு தனியாக தரவேண்டும் என்றும். ஆக மொத்தம் ரூ.13,000/-ம் கொடுக்குமாறு தெரிவித்தார். மேலும். திரு.ஜெகன் அவர்கள் கேட்ட பணம் மொத்தம் ரூ.13,000/-யை 05.04.2022-ந்தேதி தனது அலுவலகத்தில் வந்து தன்னை சந்தித்து பணத்தை தரவேண்டும் என்றும் அப்படி பணம் கொடுத்தால்தான். மின்இணைப்பு வழங்க பரிந்துரை செய்ய ஏற்பாடு செய்வேன் என்று கறாராக கூறியதால். நான் அங்கிருந்து வந்துவிட்டேன். பின்பு நான் மின்சார வாரியத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரியும் திரு.ஜெகன் அவர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் ரூ.3,000/- மற்றும் அவருக்கு தனியாக லஞ்சமாக பணம் ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்ததை என் தந்தை திரு.ஸ்ரீராம் வர்மா அவர்களிடம் தெரிவித்தேன். மேலும். எனக்கும் என் தந்தைக்கும் கும்மிடிப்பூண்டி மின்சார வாரியத்தில் பணிபுரியும் வணிக ஆய்வாளர் திரு.ஜெகன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே. எனது தந்தை இது சம்பந்தமாக திருவள்ளூர் லஞ்ச ஒழிப்புத்துறையில் வணிக ஆய்வாளர் திரு.ஜெகன் மீது புகார் கொடுக்குமாறு என்னிடம் தெரிவித்தார். எனவே. நான் எனது தந்தை பெயரில் உள்ள வீட்டுமனைக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்க கும்மிடிப்பூண்டி மின்சார வாரிய அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரியும் திரு.ஜெகன் அவர்களுக்கு. அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணம் ரூ.3000/-ம் மற்றும் அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/-ஐ கொடுக்க எனக்கும் என் தந்தைக்கும் விருப்பம் இல்லாததால். இன்று 04.04.2022 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு திருவள்ளூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு வந்து காவல் ஆய்வாளர் ஆகிய தங்களிடம் திரு.ஜெகன் அவர்கள் கேட்ட அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணம் ரூ.3000/- தனியாகவும் மற்றும் அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/- தனியாகவும் ஆக மொத்தம் ரூ.13,000/-த்துடன் வந்து. திரு.ஜெகன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி தெரிவித்தேன். மேலும். தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.03/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continuous.....)**

கொடுக்கிறேன் என்று தெரிவித்தேன். எனக்கு தமிழ் பேச தெரியும். பேசுவதை புரிந்துக்கொள்வேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாத காரணத்தால். நான் அளித்த வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் ஆகிய தாங்கள். நான் சொல்ல சொல்ல அலுவலக கணினியில். தங்கள் அலுவலக போலீசார் உதவியுடன் டைப் செய்து. பிரிண்ட் எடுத்து அதனை என்னிடம் படித்து காட்டினீர்கள். நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்புகார் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். (**sd**.Tr.S.Indirajeet Kushwaha).

Honoured Sir,

The above statement was recorded by me (G.Annadurai, Inspector of Police, V&AC, Kanchipuram i/c. Thiruvallur) on 04.04.2022 at 16.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, enquiry was conducted in a discree manner. Based on the outcome of the Discreet enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Jagan, Commercia Inspector, O/o. the Assistant Engineer, TANGEDCO, Gummidipoondi, Thiruvallu District, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.03/AC/2022/TVL, u/s 7 of The Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018) on 04.04.2022 at 17.30 hrs. The original FIR along with statement of complainant was sent to the Hon'ble CJM cum Special Judge, Thiruvallur. Copies send to Officers concerned and took-up the investigation.

**INSPECTOR OF PO**
**VIGILANCE & ANTI CORRU**
**Thiruvallur - 602 001.**